17.07.2025

OS No: 378/2023

வா.சா. 2 திரு. சந்திரசேகர் த/பெ. மூக்கையா

**7,8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது அப்பா மூக்கையா தாவா வழக்கில் 1ம் வாதி என்றும் நான் 2 ம் வாதி என்று சொன்னால் சரிதான். எனது அப்பா வீட்டில் தான் ஆடு மாடு மேய்த்துக்கொண்டு இருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது அப்பாவின் அப்பாவானா சப்பானிகோனாரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் அப்பாவனா சப்பானிகோனார் பெயரில் ஆரம்பத்தில் எத்தனை ஏக்கர் நஞ்சை நிலமும் எத்தனை ஏக்கர் புஞ்சை நிலமும் இருந்தது என்றால் தெரியாது. 1970ம் வருடம் மேற்சொன்ன சப்பானி கோனார் 4 ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்துள்ளார் என்றும் 2 பெண் பிள்ளைகளுக்கு பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு வயது 42 ஆகும். 1970ம் வருடம் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடும் 1970ம் வருட பாகப்பிரிவினையில் யார் யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் அதில் நஞ்சை எவ்வளவு புஞ்சை எவ்வளவு என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1970ம் வருட பாகப்பிரிவினையில் பாகம் பிரிக்கப்படவில்லை என்றும் தாவா சொத்துககள் 1980ம் வருடம் பாகம் பிரிக்கப்பட்டு 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகளின் தந்தையான ரெங்கன் பெயருக்கு ஒதுக்கப்பட்டவை என்றால் சரியல்ல. 1986 முதல் 1987 வருடம் வரையிலான நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் எனது அப்பா மற்றும் 4 ஆண் வாரிசுகளுக்கு 1980 ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் அவர் அவர்களுக்கு கிடைத்த சொத்திற்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு 1980ம் வருட பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்திற்கு மட்டும் எனது ஐயா சப்பானி கோனார் பெயரிலேயே 169 எண்ணில் பட்டா இருந்தது என்றால் சப்பானி கோனார் பெயரில் 160

எண்ணில் பட்டா இருந்தது சர்வே எண். 244/7 ஆகும். தற்பொது வரை 169 எண்ணில் பட்டாவில் கண்ட புஞ்சை நிலங்களுக்கு சப்பானி கோனார் பெயரிலேயே இருந்து வருகிறது என்றால் சரிதான். சர்வே எண். 225/6, 226/7, 236/5, 239/17 ஆகியவற்றிற்கு பட்டா எண் 169 ல் எங்களது ஐயா சப்பானி கோனார் பெயரிலேயே இருந்து வருகிறது என்றும் எங்களது பெயருக்கு பட்டா எற்படவில்லை என்றும் சொன்னால் சர்வே எண். 236/5 க்கு எங்களது பெயரில் பட்டா உள்ளது. மேற்சொன்ன இடத்திற்கு பட்டா எண் என்ன என்றால் எண். 3357 ஆகும். எந்த வருடம் மேற்சொன்ன பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டது என்றால் தாவா வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னால் ஏற்பட்டது. ரெங்கன் பாகத்திற்கு கிடைத்த சொத்தை 2010 ம் வருடம் அவருடைய பிள்ளைகளான 6 முதல் 8 வரையிலானவர்களுக்கு வாய் மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை மூலம் ஒதுக்கப்பட்ட தாவா சொத்துக்களானது 8ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவருடைய அனுபவத்தில் கடந்த 15 வருடங்களாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நஞ்சை புஞ்சை நிலங்கள் நீங்களாக சப்பானி கோனார் தனது 4 ஆண் பிள்ளைகளுக்கும் 4 வீடுகளை கொடுத்துள்ளார் என்றும் மேற்படி 4 வீடுகளும் தற்பொழுது ஓட்டு வீடுகளாக உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவுடன் பிறந்த ரெங்கம்மாளுக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். ரெங்கம்மாளும் இறந்து விட்டார் என்றால் சரிதான். தாவா வழக்கில் 8ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து பாத்தியம் உள்ளதால் அவரும் அவருடைய சகோதரரான 7ம் பிரதிவாதி அவருக்கு உதவியாக வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றும் மற்ற பிரதிவாதிகள் தீவிரமாக தாவா வழக்கை ஆட்சேபித்து நடத்தவில்லை என்றால் சரியல்ல. மற்ற எதிர்வாதம் செய்யும் பிரதிவாதிகள் வாதிகளுடன் கூட்டாக சேர்ந்து வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தமிழக அரசின் தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை வளர்த்திட பைப் லைன் போடப்பட்டு தண்ணீர் பாய்ச்சிட திட்டம் தீட்டியிருந்தார்கள் என்றும் அதனை நான் தாவா வழக்கை தாக்கல் செய்து நிறுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா நிலத்தை தவிர அருகில் உள்ள மற்ற நிலங்களுக்கு தமிழக அரசின் தரிசு

நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சோலார் திட்டத்தின் மூலம் தண்ணீர் பாய்சி மரம் வளர்க்கிறார்கள் என்றால் கிடையாது. தாவா சொத்து 8ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினைகள் ஒதுக்கப்பட்டு 8ம் பிரதிவாதி அனுபவித்து வருவதால் தாவா சொத்து பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1980ம் வருடமே எங்களது குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றும் அதனால் தாவா வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலவரை சட்டத்தின் அடிப்படையிலும் தாவா வழக்கு நசிந்து விட்டது என்றால் சரியல்ல. சப்பானி கோனாரின் அனைத்து செத்துக்களையும் உள்ளடக்கி பாகப்பிரிவினை கேட்க முடியும் என்றும் தாவா சொத்துக்களை மட்டும் குறிப்பிட்டு தாவா வழக்கு பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.07.17 16:34:49 +0530